In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.129/2025

Deposition of P.W.17

| | |
|---|---|
| Name | திரு.வேல்முருகன் |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 18th day of February 2026.

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார் .)

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி தாளமுத்துநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு தூத்துக்குடி வடக்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது 14.12.2024 அன்று மாலை 16 மணிக்கு தூத்துக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண்.565/2024 பிரிவு 194 BNSS வழக்கில் சம்பவ இடமான முகமதுசாதலிபுரத்தில் வைத்து காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று வழக்கில் இறந்த செல்லம்மாள் என்பவரின் பிரேதத்தை இலவச அமரர் ஊர்தியை வரவழைத்து தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் பிரேத வைப்பறையில் வைத்து விட்டு நிலையம் திரும்பினேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது இறந்தவரின் உறவினர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், பொதுமக்கள் கூட்டமாகஇருந்ததாலும் பிரேதத்தை உடனடியாக சம்பவ இடத்தில் இருந்து எடுத்து சென்றதாக

சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். உறவினர்கள் கூட்டம் இறந்தவரின் வீட்டிற்குள் செல்லமுடியாத அளவிற்கு இருநதார்கள் என்றால் வாசலில் கூட்டமாக இருந்தார்கள். சம்பவ இடத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அரைமணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். பிண வைப்பறையில் பிணம் கெட்டு போகாமல் இருப்பதற்காக குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்படுவது வழக்கம் என்றாலும், அப்படி தான் இந்த வழக்கில் பிரேதம் வைக்கப்பட்டது என்றால் சரிதான். குளிர்சாதன அறையில் பிரேதத்தை வைத்திருக்கும்போது களவு போய்விடக்கூடாது என்பதற்காக பிரேதத்தில் இருந்த நகைகள் கழற்றி எடுக்கப்பட்டபின்பு தான் அறையில் வைக்கப்படும் என்றால் சரிதான். இந்த பிணமும் அவ்வாறு தான் வைக்கப்பட்டது என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் மாலை 5.45 மணிக்கு பிரேதத்தை கொண்டு சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் 4 மணிக்கு தான் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்கள். இலவச ஆம்புலன்ஸ் வரவழைத்ததில் காலதாமதமாகிவிட்டது. பிரேதத்தை எடுக்கும்போது அதனருகில் எந்த தடயத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை :**</u>இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/–எம்.பி.முருகன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.